செ.வெ.எண்:555 நாள்:05.07.2010

## செய்தி வெளியீடு

### தரமான உணவு சுகாதாரமான முறையில் தயார் செய்து பொது மக்களுக்கு வழங்கப்பட்டது

### கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர் திரு. ஸ்வரன் சிங், இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வருகை தரும் பொது மக்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கு மதிய உணவுப் பொட்டலங்கள் தயார் செய்து வழங்குவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்ட விருந்தோம்பல் குழு **24.4.2010** அன்று கோவையில் நடைபெற்ற கூட்டத்தில் விரிவாக விவாதித்து இறுதியாக இரண்டு சாத வகைகள் தலா **250** கிராம் பிளாஸ்டிக் பாத்திரத்தில் (பிளாஸ்டிக் சிறு கரண்டியுடன்), இனிப்பு **40** கிராம், சிப்ஸ், ஊறுகாய் மற்றும் குடிநீர் பாட்டில் அரை லிட்டர் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சியின் முதல் மற்றும் கடைசி நாட்களில் தலா **1.5** இலட்சம் பேருக்கும், மற்ற நாட்களில் **50,000** பேருக்கும் பொட்டலங்கள் வழங்குவது என தீர்மானித்து இதற்காக தகுதியான உணவு வழங்கும் நிறுவனங்கள் தேர்வு செய்ய தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலமாக **19.05.2010** அன்று திறந்த வெளி ஒப்பந்தப் புள்ளி செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்தி

கோரப்பட்டது. ஒளிவுமறைவற்ற முறையைப் பின்பற்றி, ஒப்பந்தப் புள்ளியில் பங்குபெற்று, குறைந்த விலைப்புள்ளி அளித்த சென்னை வசந்த பவன் மற்றும் அடையார் ஆனந்த பவன் ஆகிய இரண்டு உணவகங்களுக்கு உணவுப் பொட்டலங்களை ரூ.59/-க்கு வழங்குவதற்கான ஆணை வழங்கிட தீர்மானிக்கப்பட்டது. இந்த உணவுப் பொட்டலங்களை ரூ.30/- மானிய விலையில் வழங்குவதெனவும் முடிவெடுக்கப்பட்டது. மேலும், நிர்ணயித்த அளவுக்கு 25% கூடுதல் அல்லது குறைவாக, தேவைக்கேற்ப உணவுப் பொட்டலங்களைத் தயாரிக்க வேண்டுமென்றும் மேற்படி நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு 10.6.2010 அன்று கோவையில் நடைபெற்ற விருந்தோம்பல் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

4,75,000 பொட்டலங்களை ஐந்து தினங்களுக்கும் வழங்கக் கோரியதில், 4,06,475 உணவுப் பொட்டலங்கள் மட்டுமே ஒப்பந்ததாரர்களால் வழங்கப்பட்டது. அதில் பொது மக்களுக்கு 3,91,109 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 15,366 உணவுப் பொட்டலங்கள் தரம் மற்றும் எடை குறைந்து காணப்பட்டதால், அவை திருப்பி அனுப்பப்பட்டன. பொது மக்களுக்கு வழங்கப்பட்ட 3,91,109 உணவுப் பொட்டலங்களுக்கு மட்டுமே பணம் பட்டுவாடா செய்ய வேண்டியுள்ளது. மேலும், பொது மக்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள் அவ்வப்போது எடை மற்றும் தரம் சரி

பார்க்கப்பட்டது. எனவே, எடை மற்றும் தரம் குறைந்த உணவுப் பொட்டலங்கள் பொது மக்களுக்கு வழங்கப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் முதல் நாளில் அலைமோதிய பெரும் மக்கள் கூட்டத்திற்கு முழுவதுமாக உணவுப் பொட்டலங்கள் வழங்க முடியாமல் பற்றாக்குறை நிலவும் அளவிற்கு வரவேற்பு இருந்தது.

ஒப்பந்தப் புள்ளி விதிகளின்படி தரம் குறைந்த உணவு பொட்டலங்களுக்குத் தொகை வழங்க இயலாது. அதே போல உரிய நேரத்தில் வழங்கப்படாத உணவுப் பொட்டலங்களுக்கு ஒப்பந்த விதி மீறல் காரணமாக அபராதம் விதிக்கப்படும். எனவே வழங்கப்படாத பொட்டலங்களுக்கும், தரம் குறைந்த உணவுப் பொட்டலங்களுக்கும் தொகை வழங்குவதாக தெரிவித்திருப்பது அவதூறான செயலாகும். மேலும் இது சம்பந்தமான ஒவ்வொரு நடவடிக்கையையும் விருந்தோம்பல் குழுவின் 6 கூட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு முறைப்படி முடிவு எடுக்கப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

ஸ்வரன் சிங் 5.7.10

ஸ்வரன் சிங், இ.ஆ.ப.,
முதன்மை செயலாளர்
கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை